முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2024 சனவரி

## (101) நிதிக் கணக்கீடு

(Financial Accounting)

2024-02-17
காலை
[9.00 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

பக்கங்கள் : 11
வினாக்கள் : 06

(1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 01

*இல.* ***1.1*** *இலிருந்து* ***1.10*** *வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** கடந்தகால நிகழ்வுகளின் விளைவாக நிறுவனத்தினால் கட்டுப்படுத்தப்படும் தற்கால பொருளாதார வளங்கள் :

(1) உரிமையாண்மை. (2) பொறுப்புக்கள். (3) சொத்துக்கள். (4) வருமானம்.

**1.2** வகை, அளவு, ஒப்புக்கொள்ளப்பட்ட விலை, தேவையான திகதி மற்றும் ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகள் போன்ற பொருளை வாங்குவதற்குத் தேவையான விபரங்களை கூட்டிணைத்து, கொள்வனவாளர் ஒருவரால் தயாரிக்கப்படுகின்ற சரியான மூல ஆவணத்தைத் தெரிவு செய்க :

(1) கொடுப்பனவு உறுதிச்சீட்டு (PV). (2) கொள்வனவுக் கட்டளை (PO).

(3) பொருள் பெறுவனவுச் சீட்டு (GRN). (4) பொருள் கோரிக்கைச் சீட்டு (MRN).

**1.3** PESTEL பகுப்பாய்வின்படி, வணிகங்களின் கணக்கீடு மற்றும் வியாபார நடவடிக்கைகளைப் பாதிக்கக் கூடிய ஒரு பொருளாதாரக் காரணியைக் கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க :

(1) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

(2) பரிமாற்ற வீதம்.

(3) வாடிக்கையாளர்களின் அணுகுமுறை.

(4) கணக்கீட்டு மென்பொருளின் பாவனை.

**1.4** **அருண டிரேடர்ஸ்** தனது வணிகத்தை விரிவாக்கம் செய்வதற்காக ரூபா 500,000/- வங்கிக் கடனொன்றைப் பெற்றுக்கொண்டது. இந்த ஊடுசெயல் தொடர்பில் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான சரியான தாக்கத்தை கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க :

| | சொத்துக்கள் (ரூபா) | = | மூலதனம் (உரிமையாண்மை) (ரூபா) | + பரிப்புக்கள் (ரூபா) |
|---|---|---|---|---|
| (1) | + 500,000 | = | + 500,000 | - |
| (2) | - 500,000 | = | - | - 500,000 |
| (3) | + 500,000 | = | - | + 500,000 |
| (4) | - 500,000 | = | - 500,000 | - |

**1.5** **சமன் டிரேடர்ஸ்** ரூபா 2,500,000/- இற்கு காணியொன்றைக் கொள்வனவு செய்தது. இக்காணியின் தற்போதைய சந்தைப் பெறுமதி ரூபா 4,000,000/-. எவ்வாறாயினும், இது ரூபா 2,500,000/- கொள்வனவு விலையில் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பான கணக்கீட்டு எண்ணக்கரு :

(1) பொருத்தப்பாட்டு எண்ணக்கரு.

(2) அட்டுறு எண்ணக்கரு.

(3) தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு.

(4) வரலாற்றுக் கிரய எண்ணக்கரு.

**1.6** வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான காசுப் பெறுவனவு காரணமாக கணக்கீட்டு மூலகங்கள் மீது ஏற்படும் சரியான தாக்கத்தை கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க :

(1) சொத்துக்களில் அதிகரிப்பு மற்றும் பரிப்புக்களில் அதிகரிப்பு.

(2) சொத்துக்களில் அதிகரிப்பு மற்றும் உரிமையாண்மையில் அதிகரிப்பு.

(3) சொத்துக்களில் குறைவு மற்றும் உரிமையாண்மையில் குறைவு.

(4) சொத்துக்களில் எவ்வித மாற்றமும் இல்லை.

**1.7** 2023 டிசெம்பர் 31 இல் வங்கிக் கூற்றில் சாதகமான மீதி ரூபா 65,000/- காணப்பட்டதுடன் இது அந்தத் திகதியில் உள்ள காசேட்டு மீதியை விட ரூபா 5,000/- குறைவானதாகும். இந்த வித்தியாசத்திற்கான காரணத்தை கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க :

(1) வங்கிக் கட்டணங்கள் ரூபா 2,500/- காசேட்டில் பதியப்படவில்லை.

(2) ரூபா 5,000/- பெறுமதியான காசோலை விநியோகிக்கப்பட்டுள்ள போதிலும் அது கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(3) ரூபா 5,000/- பெறுமதியான காசோலை வைப்புச் செய்யப்பட்ட போதிலும் அது இன்னும் தேறியிருக்கவில்லை.

(4) வாடிக்கையாளர் ஒருவரால் செய்யப்பட்ட ரூபா 5,000/- நேரடி வைப்பானது காசேட்டில் பதியப்படவில்லை.

**1.8** 2024 சனவரி மாதத்திற்கான **சமீர் டிரேடர்ஸ்** இன் கணக்கேடுகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

| | **ரூபா** |
|---|---|
| 2024 சனவரி 31 இல் நிகரச் சொத்துக்கள் | 4,500,000 |
| 2024 சனவரி 01 இல் நிகரச் சொத்துக்கள் | 3,700,000 |
| மாதத்தின் காலப்பகுதியில் எடுப்பனவுகள் | 200,000 |
| மாதத்தின் காலப்பகுதியில் உள்ளிடப்பட்ட மேலதிக மூலதனம் | 300,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2024 சனவரி 31 இல் முடிவடைந்த மாதத்திற்கான வணிகத்தின் இலாபம் :

(1) ரூபா 700,000/-. (2) ரூபா 800,000/-. (3) ரூபா 900,000/-. (4) ரூபா 1,100,000/-.

**1.9** கீழ்வருவனவற்றுள் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கிலுள்ள மீதிக்கும் வங்கிக் கூற்றிலுள்ள மீதிக்கும் இடையில் வித்தியாசம் காணப்படுவதற்கான ஒரு காரணமாக இருக்கக்கூடிய கால வேறுபாடாக அமைவது:

(1) வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்ற நேரடிப் பண அனுப்பல்கள்.

(2) காசோலைகள் வைப்புச் செய்யப்பட்டும் அவை தேறாது இருத்தல்.

(3) வங்கியால் வங்கிக் கட்டணங்கள் வரவு (debited) வைக்கப்படல்.

(4) வங்கியால் தவறுதலாக மேலதிகப்பற்று வட்டி வரவு வைக்கப்படல்.

**1.10** **வரையறுக்கப்பட்ட ABC கம்பனி** அதன் கட்டடத்தின் ஒரு பகுதியை ரூபா 10,000/- என்ற மாத வாடகையில் வாடகைக்கு விட்டுள்ளது. 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் ரூபா 110,000/- கிடைக்கப் பெற்றதுடன் மீதித் தொகை ரூபா 10,000/- அடுத்த நிதி ஆண்டின் காலப்பகுதியில் கிடைக்கப் பெற்றது. இக்கம்பனியின் உதவிக் கணக்காளரான **விஷ்ணு** 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வாடகை வருமானமாக ரூபா 110,000/- இனை மாத்திரம் ஏற்பிசைவு செய்திருந்தார்.

கீழ்வருவனவற்றுள் எந்தக் கணக்கீட்டு எண்ணக்கரு **விஷ்ணுவால்** மீறப்பட்டுள்ளது?

(1) பொருத்தப்பாட்டு எண்ணக்கரு. (2) உரிம (அலகுசார்) எண்ணக்கரு.

(3) அட்டுறு எண்ணக்கரு. (4) பொருண்மைசார் எண்ணக்கரு.

*கீழே* **1.11** *தொடக்கம்* **1.15** *வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் குறிப்பிடுக.*

**1.11** நிறுவனத்தின் உரிமையாளர்களுக்குப் பகிர்ந்தளிப்பது தவிர்ந்த, சொத்துக்களின் குறைவு அல்லது பரிப்புக்களின் அதிகரிப்பு காரணமாக உரிமையாண்மையில் ஏற்படும் குறைவை செலவினமாக வரையறுக்கலாம்.

**1.12** விரைவுப் புத்தக (QB) கணக்கீட்டுப் பொதியை பிரத்தியேக கணக்கீட்டு மென்பொருள் ஒன்றாக வகைப்படுத்தலாம்.

**1.13** கணக்கீட்டுச் செயன்முறையின் ஒரு கணக்கீட்டு உள்ளீடு விற்பனை நாளேடு ஆகும்.

**1.14** பக்கச்சார்பற்ற தன்மை (objectivity) என்பது கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்களால் பின்பற்றப்படுகின்ற ஒழுக்கநெறிக் கோவையின் ஒரு கோட்பாடாகும்.

**1.15** இழைக்கப்பட்ட வழுக்கள் (errors of commission) என்பது ஒரு ஊடுசெயலை முற்றுமுழுதாகப் பதிவு செய்யாது விடுதல் அல்லது இரட்டைப் பதிவின் ஒரு பதிவை மாத்திரம் பதிவு செய்தல் ஆகும்.

**1.16** தொடக்கம் **1.20** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.16** கீழ்வரும் ஊடுசெயல்களுக்குப் பயன்படுத்தப்படும் உரிய மூல ஆவணங்களை இனங்காண்க:

(1) கடனடிப்படையில் அலுவலகப் பாவனைக்காக ரூபா 200,000/- இற்கு கணினியொன்றைக் கொள்வனவு செய்தல்.

(2) **வரையறுக்கப்பட்ட ABC கம்பனிக்கு** கடன் அடிப்படையில் ரூபா 600,000/- பெறுமதியான பொருள்களை விற்பனை செய்தல்.

**1.17** **கமல் டிரேடர்ஸ்** 2022 ஏப்ரல் 01 இல் ரூபா 6,000,000/- இற்கு இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்தது. பயன்தரும் ஆயுட்கால முடிவில் அதன் ஒடிவுப் பெறுமதி ரூபா 1,000,000/- என்பதுடன் இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகள் ஆகும். பயன்தரும் ஆயுட்காலம் ஈறாக நேர்கோட்டு முறையில் (ஆண்டிற்கு 20% இல்) இயந்திரத்தை பெறுமானத்தேய்விடுவது வணிகத்தின் கொள்கையாகும். 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இயந்திரத்தின் பெறுமானத் தேய்வைக் கணிக்குக.

**1.18** நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தக்கூடிய சொத்துக்களுக்கு இரண்டு (02) உதாரணங்களைப் பட்டியலிடுக.

**1.19** நிதித் தகவல்களின் இரண்டு (02) வரையறைகளைக் (limitations) குறிப்பிடுக.

**1.20** “பொருத்தப்பாட்டு எண்ணக்கரு” பற்றிச் சுருக்கமாக விபரிக்குக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 02

**நஸீர் மெஷின் வேக்ஸ்** என்பது இயந்திர உதிரிப்பாகத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனமாகும். 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **நஸீர் மெஷின் வேக்ஸ்** இன் கணக்கேடுகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| விபரம் | ரூபா |
|---|---|
| 2022 ஏப்ரல் 01 இல் மூலப்பொருள் இருப்பு | 850,000 |
| மூலப்பொருள் கொள்வனவுகள் | 3,500,000 |
| 2022 ஏப்ரல் 01 இல் புத்துருவாகும் வேலைகள் (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 225,000 |
| மூலப்பொருள்களின் உள்வரும் வண்டிக்கூலி | 75,000 |
| நேர் கூலி – உற்பத்திப் பணியாளர்கள் | 1,500,000 |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | 500,000 |
| மின்சாரச் செலவினங்கள் | 520,000 |
| தொழிற்சாலை முகாமையாளரின் சம்பளம் | 370,000 |
| பொறி மற்றும் இயந்திரம் மீதான தேய்மானம் | 320,000 |
| மோட்டார் லொறி மீதான தேய்மானம் | 560,000 |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2023 மார்ச் 31 இல் இறுதித் தொக்கு மீதிகள் கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன :

| விபரம் | ரூபா |
|---|---|
| மூலப்பொருள் இருப்பு (கிரயத்தில்) | 250,000 |
| புத்துருவாகும் வேலைகள் (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 425,000 |

(2) கீழ்வரும் செலவினங்கள் பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் :

| செலவினம் | தொழிற்சாலை | அலுவலகம் |
|---|---|---|
| மின்சாரச் செலவினம் | 85% | 15% |
| பாதுகாப்புக் கட்டணம் | 90% | 10% |

(3) பொறி மற்றும் இயந்திரமும் மோட்டார் லொறியும் முற்றுமுழுதாக தொழிற்சாலை நோக்கத்திற்காகவே பயன்படுத்தப்படுகின்றன.

(4) நேர் கூலிகளுக்கு மேலதிகமாக, உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு இயந்திர உதிரிப்பாகங்களுக்கும் உதிரிப்பாகம் ஒன்றிற்கு ரூபா 100/- என்ற அடிப்படையில் ஊக்கத்தொகை பெற உற்பத்திப் பணியாளர்கள் உரித்துடையவர்கள். ஆண்டின் காலப்பகுதியில் 10,000 உதிரிப்பாகங்கள் தயாரிக்கப்பட்டன.

(5) தயாரிக்கப்பட்ட அலகுகள் உற்பத்திக் கிரயத்தில் 20% இலாப எல்லை வைத்து வியாபாரப் பிரிவுக்கு மாற்றப்படுகின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **நஸீர் மெஷின் வேக்ஸ்** இன் உற்பத்திக் கிரயக் கூற்றை (உற்பத்திக் கணக்கு) **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 03

**ரவி சுப்பர்** என்பது ஆரம்ப மூலதனமாக ரூபா 4,850,000/- இனை காசாக முதலீடு செய்து 2022 ஏப்ரல் 01 இல் **ரவி** என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு தனியுடமை வியாபாரமாகும்.

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் (காசேடு) பொழிப்பு கீழ்வருமாறு :

**காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு)**

| பெறுவனவுகள் | வரவு (ரூபா) | கொடுப்பனவுகள் | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| ஆரம்ப மூலதன முதலீடு | 4,850,000 | காசுக் கொள்வனவுகள் | 1,850,000 |
| காசு விற்பனைகள் | 3,200,000 | வியாபார கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 2,900,000 |
| வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான பெறுவனவுகள் | 2,825,000 | மின்சாரமும் நீரும் | 255,000 |
| | | சம்பளங்களும் கூலிகளும் | 1,200,000 |
| | | சில்லறைக் காசுக்காக மாற்றப்பட்ட தொகை | 100,000 |
| | | விநியோக வான் (2022 அக்டோபர் 01 இல் கொள்வனவு செய்யப்பட்டது) | 3,000,000 |
| | | மீதி மு.கொ.செ. | 1,570,000 |
| | **10,875,000** | | **10,875,000** |

(2) 2023 மார்ச் 31 இல் வருமதி மற்றும் சென்மதி மீதிகள் கீழ்வருமாறு :

| | ரூபா |
|---|---|
| வியாபாரக் கடன்பட்டோர் | 2,400,000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 2,100,000 |
| செலுத்த வேண்டிய மின்சார மற்றும் நீர் கட்டணங்கள் | 10,000 |

(3) மோட்டார் வாகனங்கள் கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டிற்கு 25% இல் தேய்மானம் செய்யப்பட வேண்டும்.

(4) கீழ்வரும் செலவினங்கள் சில்லறைக் காசிலிருந்து செலுத்தப்பட்டுள்ளன :

(i) அலுவலகச் செலவினங்கள் : ரூபா 15,000/-.

(ii) பயணங்கள் : ரூபா 12,000/-.

(iii) அச்சிடலும் காகிதாதியும் : ரூபா 25,000/-.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2023 மார்ச் 31 இல் **ரவி சுப்பர்** இன் பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 04

கணக்குகள் உதவியாளரால் தயாரிக்கப்பட்ட 2023 மார்ச் 31 இலான **பிமல் டிரேடர்ஸ்** இன் பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தியாசம் ரூபா 279,500/- ஆனது தொங்கற் கணக்கிற்கு செலவு (credited) வைக்கப்பட்டு வரைவு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. **பிமல் டிரேடர்ஸ்** வியாபார வருமதிகள் மற்றும் வியாபார சென்மதிகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பேணுகிறது.

பின்னர், வித்தியாசத்திற்கான காரணங்களாக கீழ்வருவன இனங்காணப்பட்டன :

(1) 2023 மார்ச் மாதத்திற்காகச் செலுத்த வேண்டிய பாதுகாப்புக் கட்டணம் ரூபா 35,000/- ஆனது இரண்டு பேரேட்டுக் கணக்குகளிலும் இரு தடவைகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(2) நிலையான வைப்பு மீது பெறப்பட்ட வட்டி வருமானம் ரூபா 2,750/- தவறுதலாக வட்டி செலவினக் கணக்கிற்கு வரவுப் பதிவு (debited) செய்யப்பட்ட அதே வேளை காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(3) கொள்வனவு நாளேட்டின் மொத்தம் ரூபா 20,000/- இனால் மிகைப்படுத்திக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(4) ரூபா 250,000/- இற்குச் செய்யப்பட்ட அலுவலக உபகரணம் ஒன்றின் கொள்வனவானது அலுவலக செலவினக் கணக்கிற்கு வரவுப் பதிவு (debited) செய்யப்பட்டிருந்த அதே வேளை மற்றைய பதிவானது கணக்கேடுகளில் சரியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆண்டிற்கான இந்த அலுவலக உபகரணம் மீதான பொருத்தமான தேய்மானம் ரூபா 50,000/-.

(5) காசு விற்பனை ரூபா 265,000/- ஆனது காசேட்டில் மாத்திரம் பதியப்பட்டிருந்ததுடன் சம்பந்தப்பட்ட பதிவானது தொடர்புடைய பேரேட்டுக் கணக்கில் பதியப்படவில்லை.

(6) தொலைபேசிச் செலவினம் ரூபா 67,000/- ஆனது தொலைபேசிச் செலவினக் கணக்கில் ரூபா 76,000/- எனப் பதியப்பட்டிருந்தது. ஆனால் இது காசேட்டில் சரியாகப் பதியப்பட்டிருந்தது.

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகள். (07 புள்ளிகள்)

(b) தொங்கற் கணக்கு. (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(A) **துனித்** என்பவர் 2023 டிசெம்பர் 01 இல் சிற்றுண்டிக் கடை ஒன்றை ஆரம்பித்தார். 2023 டிசெம்பர் மாத காலப்பகுதியில் **துனித்** இன் வியாபாரத்தில் கீழ்வரும் ஊடுசெயல்கள் இடம்பெற்றிருந்தன :

(1) **துனித்** ரூபா 2,000,000/- இனை ஆரம்ப மூலதனமாக இட்டிருந்தார். இதில் ரூபா 1,200,000/- காசும் ரூபா 800,000/- பெறுமதியான அலுவலக உபகரணங்களும் அடங்குகின்றன.

(2) மீள்விற்பனைக்காக கடனடிப்படையில் ரூபா 650,000/- பெறுமதியான பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

(3) ரூபா 260,000/- கிரயமான சிற்றுண்டி வகைகள் காசு அடிப்படையில் ரூபா 350,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டன.

(4) மாதத்தின் காலப்பகுதியில் **துனித்** இனால் மேற்கொள்ளப்பட்ட காசு எடுப்பனவுகள் ரூபா.250,000/-.

(5) ஊழியர்களின் மாதச் சம்பளங்களாக ரூபா 200,000/- செலுத்தப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

கீழ்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான மேலுள்ள ஒவ்வொரு ஊடுசெயலினதும் தாக்கத்தைக் **குறிப்பிடுக.**

*[அலுவலக உபகரணம் + தொக்கு + காசு = உரிமையாண்மை (மூலதனம்) + பரிப்புக்கள்]*

(05 புள்ளிகள்)

(B) 2023 டிசெம்பர் 31 இல், **நிமால் ஹாட்வெயார்** வங்கிக் கூற்றின்படியான சாதகமான மீதி ரூபா.277,500/- இனைக் கொண்டிருந்தது. அதே திகதியில் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கும்கூட ரூபா 225,000/- என்ற ஒரு வரவு (சாதகமான) மீதியைக் காட்டியது.

வங்கிக் கூற்றின் மீதிக்கும் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்குமிடையிலான வித்தியாசத்திற்கான காரணங்களாக கீழ்வருவன இனங்காணப்பட்டன :

(1) வங்கியானது வழங்கப்பட்ட நிலையியற் கட்டளை அறிவுறுத்தல்களின் அடிப்படையில் மாதாந்த வாடகைக்காக ரூபா 55,000/- இனை வரவுப்பதிவு (debited) செய்திருந்தது. இது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(2) 2023 டிசெம்பர் 30 இல் வழங்கப்பட்ட ரூபா 128,000/- பெறுமதியான காசோலை 2023 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை கொடுப்பனவுக்காக வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.

(3) 2023 டிசெம்பர் 15 இல் வங்கியால் வரவு வைக்கப்பட்ட (debited) ரூபா 5,000/- வங்கிக் கட்டணங்கள் தொடர்பில் காசேட்டில் கவனஞ் செலுத்தப்படவில்லை.

(4) வங்கியானது 2023 டிசெம்பர் 31 இல் முன்னைய மாதத்தில் மேலதிகமாக வசூலிக்கப்பட்ட மேலதிகப்பற்று வட்டி ரூபா 12,500/- இனை செலவுப்பதிவு (credited) செய்திருந்தது. இது தொடர்பில் காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(5) ரூபா 28,000/- பெறுமதியான காசோலை வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட போதிலும் அது 2023 டிசெம்பர் 31 வரை தேறியிருக்கவில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு). (03 புள்ளிகள்)

(b) 2023 டிசெம்பர் 31 இல் வங்கி கணக்கிணக்கக் கூற்று. (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**நிஹால் எலக்ரிக்கல்ஸ்** என்பது **நிஹால்** என்பவருக்குச் சொந்தமான ஒரு தனியுடமை வியாபாரமாகும். 2023 மார்ச் 31 இலான **நிஹால் எலக்ரிக்கல்ஸ்** இன் பரீட்சை மீதி கீழ்வருமாறு :

**நிஹால் எலக்ரிக்கல்ஸ்**

**2023 மார்ச் 31 இலான பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் : | | |
| பொறி மற்றும் இயந்திரம் | 7,000 | |
| தளபாடமும் பொருத்துகளும் | 4,000 | |
| அலுவலக உபகரணம் | 1,000 | |
| திரண்ட தேய்மானம் - 2022 ஏப்ரல் 01 இல் : | | |
| பொறி மற்றும் இயந்திரம் | | 2,200 |
| தளபாடமும் பொருத்துகளும் | | 600 |
| விற்பனைகள் | | 62,900 |
| கொள்வனவுகள் | 38,000 | |
| போக்குவரத்துச் செலவினங்கள் | 900 | |
| தொக்கு – 2022 ஏப்ரல் 01 இல் | 2,800 | |
| வியாபார வருமதிகள் | 9,500 | |
| வியாபார சென்மதிகள் | | 15,900 |
| வங்கி மீதி | 3,500 | |
| காசுக் கையிருப்பு | 460 | |
| வங்கிக் கடன் | | 1,000 |
| நீர் | 2,500 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 11,000 | |
| காப்புறுதி | 260 | |
| மின்சாரம் | 7,850 | |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 350 | |
| அலுவலக வாடகை | 2,200 | |
| வங்கிக் கட்டணங்கள் | 40 | |
| மூலதனக் கணக்கு – 2022 ஏப்ரல் 01 இல் | | 8,760 |
| **மொத்தம்** | **91,360** | **91,360** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2023 மார்ச் 31 இல் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட இறுதித் தொக்கு ரூபா 9,270,000/-.

(2) 2022 அக்டோபர் 01 இல், ஆண்டிற்கு 20% வட்டி வீதத்தில் வங்கியிலிருந்து ரூபா 1,000,000/- கடன் பெற்றுக் கொள்ளப்பட்டது. அதே திகதியில், இந்தக் கடனைப் பயன்படுத்தி ரூபா 1,000,000/- பெறுமதியான அலுவலக உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டது. கடனின் மூலதன மீள்கொடுப்பனவுகள் 2023 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிப்பதுடன் ஆண்டிற்கான வட்டி கணக்கேடுகளில் கணக்கிற் கொள்ளப்படவில்லை.

(3) வணிகத்தின் கொள்கையானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் கீழ்வருமாறு பெறுமானத் தேய்விடுவதாகும் :

| | |
|---|---|
| பொறி மற்றும் இயந்திரம் | : ஆண்டிற்கு 20% |
| தளபாடமும் பொருத்துகளும் | : ஆண்டிற்கு 20% |
| அலுவலக உபகரணம் | : ஆண்டிற்கு 15% |

(4) ரூபா 260,000/- காப்புறுதியானது 2023 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2023 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியுடன் தொடர்புடையதாகும்.

(5) **சில்வா** என்பவரிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 50,000/- இனை அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்புச் செய்வதற்கு **நிஹால்** தீர்மானித்திருந்தார்.

(6) 2023 மார்ச் மாதத்திற்கான கீழ்வரும் செலவினங்கள் கணக்கேடுகளில் அட்டுறுவாகியிருக்கவில்லை :

- வாடகை : ரூபா 200,000/-
- மின்சாரம் : ரூபா 135,000/-

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று. (11 புள்ளிகள்)

(b) 2023 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |